**செய்தி வெளியீடு எண்: 43 / 2021** **நாள்:11.06.2021**

# செய்திக் குறிப்பு

---------

விளையாட்டுத்துறையில் நமது தேசத்திற்கு நற்பெயரையும், புகழையும் ஈட்டித் தரும் சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டுத் தொடர்புடையவர்கள் ஆகியோருக்கு பல்வேறு விருதுகளை இந்திய அரசு ஆண்டு தோறும் வழங்கி வருகிறது. அவ்வாறே, இவ்வாண்டிற்கான கீழ்க்காணும் விருதுகளுக்கான விண்ணப்பபங்கள் வரவேற்கப்படுகிறது.

**வ.எண். விருது**

1. **அர்ஜுனா விருது**
2. **ராஜிவ் காந்தி கேல் ரத்னா விருது**
3. **தயான்சந்த் விருது**
4. **துரோணச்சார்யா விருது**
5. **ராஷ்ட்ரிய கேல் புரோட்ஸஹான் புரஸ்கர் விருது**

மேற்காணும் விருதிற்கான விண்ணப்பங்கள் மற்றும் முக்கிய விவரங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணைய தள முகவரியான www.sdat.tn.gov.in.மற்றும் http://yas.nic.in மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விருதிற்கான விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் **16.06.2021 அன்று மாலை 3.00 மணிக்குள் dsotry@gmail.com** மின்னஞ்சல் முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை “மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி-23” என்ற முகவரிக்கு 1 பிரதிகளுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி (தொலைபேசி எண்.0431-2420685) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**